NSW Health

# NSW மாநிலத்தில் உதவியளிக்கப்படும் சுயவிருப்ப இறப்பு

**Voluntary assisted dying in NSW** — **Tamil**

NSW மாநிலத்தில் சுயவிருப்பின் கீழ் உதவியளிக்கப்பட்டு இறப்பதில் **11 படிநிலைகள்** உள்ளன. இந்தச் செயல்பாட்டினை நீங்கள் எவ்வொரு சமயத்திலும் நிறுத்தி வைக்கலாம் அல்லது முற்றாகவே நிறுத்திவிடலாம்.

**படிநிலை 1.** சுயவிருப்பின் கீழ், உதவியளிக்கப்பட்டு இறப்பதற்கான **முதல் வேண்டுகோள்** ஒன்றை நீங்கள் மருத்துவர் ஒருவரிடம் மேற்கொள்ளல்

**படிநிலை 2.** ஒருங்கிணைப்பு மருத்துவர் ஒருவர் **முதல் மதிப்பீடு** ஒன்றைப் பூர்த்தி செய்வார்

**படிநிலை 3.** இன்னொரு மருத்துவர் **கலந்துரையாடல் மதிப்பீடு** ஒன்றைச் செய்வார்

**படிநிலை 4.** **எழுத்து மூல அறிவிப்பு** ஒன்றை நீங்கள் பூர்த்தி செய்வீர்கள்

**படிநிலை 5.** சுயவிருப்பில், உதவியளிக்கப்பட்டு இறப்பதற்கான **இறுதி வேண்டுகோள்** ஒன்றை நீங்கள் மேற்கொள்ளல்

**படிநிலை 6.** உங்களுக்கான ஒருங்கிணைப்பு மருத்துவர் **இறுதி மீள்பார்வை** ஒன்றைச் செய்வார்

**படிநிலை 7.** **மருந்தை எவ்வாறு உட்கொள்வது** என்று நீங்கள் உங்களுடைய மருத்துவரது உதவியுடன் முடிவு செய்வீர்கள்

**படிநிலை 8.** **மருந்தளிப்பு அதிகாரம்** ஒன்றிற்காக உங்களுடைய மருத்துவர் விண்ணப்பிப்பார். ‘உதவியளிக்கப்பட்ட சுயவிருப்ப இறப்பு வாரியம்’ அனுமதியளிக்கும்.

**படிநிலை 9.** உங்களுடைய மருத்துவர் **மருந்திற்கான பரிந்துரையைச் செய்வார்**

**படிநிலை 10.** நீங்கள் விரும்பினால், மற்றும் நீங்கள் விரும்பும் நேரத்தில் நீங்கள் **மருந்தை** உட்கொள்வீர்கள் அல்லது மருந்துகள் உங்களுக்குக் கொடுக்கப்படும்

**படிநிலை 11.** **இறப்புச் சான்று** ஒன்று கொடுக்கப்படும்

## ‘NSW மாநில உதவியளிக்கப்படும் சுயவிருப்ப இறப்பு சேவை’ என்பது

உதவியுடன் கூடிய சுயவிருப்பு இறப்பைப் பற்றிய கேள்விகளுக்கு விடையளிப்பதற்கான தொலைபேசி இணைப்பாகும்.

நோயாளிகள் மற்றும் குடும்பங்கள் உள்ளடங்க அனைவருக்கும் இந்த சேவை ஆதரவுதவி செய்யும்.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணியில் இருந்து மாலை 4:30 மணி வரை **1300 802 133** -ஐ அழையுங்கள்.

Voluntary Assisted Dying Act 2022 (உதவியளிக்கப்படும் சுயவிருப்ப இறப்பு சட்டம் 2022)-இன் கீழான உதவியுடன் கூடிய சுயவிருப்பு இறப்பிற்கான செயல்பாட்டு முறையில் உள்ள முக்கியமான படி நிலைகளின் சுருக்கமாகும் இது. இந்த சுருக்கம் தெரிநிலைத்-தன்மை கொண்டது மட்டுமேயாகும், மற்றும் தனிப்பட்ட நோயாளர் ஒருவரது உதவியுடன் கூடிய சுயவிருப்ப இறப்பு செயல்முறையில் எழக்கூடிய அனைத்து சூழல்களையும் இது உள்ளடக்காது.